## அத்தி வரதர் கீர்த்திப்பா

**(தொடர்ச்சி - 1)**

**அத்திக்குப் பத்து - 6**

நீ பிரியும் நாள் நெருங்குதையா!
கனலாகுது எம் கல் நெஞ்சமையோ!

நாற்பது வருடம் ஓடி

மறுபடி வரும் வேளையிலே

யார் இருப்போம், யார் இறப்போம்!

யாமறியோம் பராபரமே!

எங்கிருந்து வந்தோமோ?

எங்கே நாம் போவோமோ?

என்றறியா எங்களுக்கு

மறுமையில் மன்னா உன்தன்னை

மறுபடிக்காணக் கிடைக்குமோ?

பாற்கடலில் உனைக் காணும்

பாக்கியம் நாம் செய்தோமில்லை

வைகுந்தம் வரை நடக்க

வைப்பு நிதி எமக்கில்லை

இரண்டிருபது ஆண்டு உருண்டோடி

சென்றபின்னர் மன்னா

எஞ்சிஇங்கு உயிர் தரித்து இருப்பார்க்கு

மறுபடியும் காஞ்சி செல்ல

மானுடம்பு இடம் கொடுக்குமோ?

உடல் மெலிந்து, நடை தளர்ந்து,

கண் இடுங்கி,கால் நடுங்கி, வாய்குழறி, மூச்சுமுட்ட காலன் வரும் வேளையிலே கண்ணா, குழல் மன்னா உனைக்காண்பதுவும் கைகூடுமோ?

இறப்பார்க்கு தரிசனம் திருப்பாற்கடலில் கிடைக்குமோ?

பலபிறவிகள் கண்டபின் வைகுண்டம்

நாம் காண்போமோ?

கஞ்சி வரதப்பா, காருண்யக் கடவுளப்பா

கண் திறந்து பாரப்பா

கடைத்தேற அருளப்பா!

## அத்திக்குப்பத்து _ 7

நிலம் செய்த தவறும் என்ன?

குளம் செய்த தவம்தான் என்ன?

நிலம் விடுத்து, குளம் சேரும்

குணசீலா, எம் குறைதான் என்ன?

கோசலை மைந்தனாகி

குணத்தில் நீ இமயமாகி

சீதையின் பிராணனாகி

அனுமனின் அன்பனாகி

தருமத்தின் வடிவமாகி

அயோத்தியின் அரசனாகி

அனைவரின் தெய்வமாகி

அதன் பின்னர் வந்த நோக்கம்

முடிந்ததென்று முடிவும் செய்து

புண்ணிய நதி சரயுவில்

புகுந்து நீ மறைந்த போது

அழுததோ அயோத்தி, அன்றி

அகிலமே அழுததோ

யாம் அறியோம் எம் இறைவா!

## அத்திக்குப் பத்து - 8

சிறையிலே பிறந்து பின்னர்

இரவிலே ஒளிந்து வாழ

கோகுலக் குழவியாகி

யாதவர் மைந்தனாகி

கோபியர் மன்னனாகி

அன்னை யசோதையின்

ஆணைக்கு அடிபணிந்து

மண்ணுண்ட உன் சின்ன வாயில்

விண்ணையும், மண்ணையும்,

மண் உண்ட உன்னையும், அதைக்கண்ட உன் அன்னையையும் காட்டி

மாயங்கள் செய்த கண்ணே,

குழந்தையாய் இருந்த போதே,

கொடியவர் கொட்டம் அடக்கி

அறிவொன்றும் இல்லாத அந்த

ஆய்ச்சியர் அன்பில் மூழ்கி

பாஞ்சாலி சபதம் காக்க

கௌரவர் குலம் அழித்து,

பாண்டவர் நல்லுலகம் ஆள

பாதையும் வகுத்துத்தந்து

கீதைஎனும்  மாவேதம் தந்த மாயவனே, வடமதுரைத் தூயவனே

அவதார நோக்கம் முடிய அவனி யை விட்டு நீங்க

திருவுளம் கொண்ட நீயும்

வேடன் கை இலக்கு ஆகி, வேதங்கள் தேடும் உந்தன்

பாதங்கள் புண்பட நீயும

விண்ணகரம் சென்ற அந்நாள்  யார் அழுதாரோ, எவர் அழுதாரோ

யாம் அறியோம், எவர் அறிவாரோ?

## அத்திக்குப்பத்து 9

காஞ்சியின் தலைவர் இன்று கண்முன்னே மறையும் போது

கனக்குது மனம் கரையுது உளம்

குளத்தை நீ குத்தகை எடுத்தாயோ?

நிலம் விடு நீர் வந்து சேர் என்று உலகாளும் உனக்கு ஆணையிட்டவர் எவரோ?

அத்திமர அரசே, உன்மனம் என்ன கல்லா?

## அத்திக்குபத்து 10

புண்ணியா, போவதானால் நீ போ

ஆனால் போகும் முன் உந்தன் இளையோன் தேவாதி தேவன் தேவராஜனிடம் எமக்காகச் சேதி ஒன்று சொல்லிப்போவாய்

நிலம் விடுத்தாலும், நீ எம் உளம் இருப்பாய்!

குளம் இருந்தாலும் இக்குவலயம் காப்பாய்

விடைக் கொடுக்க மனமில்லை

விதியின் வழி யாரறிவாரோ?

முற்றும்

ஆக்கம் P. K. சுப்ரமணியன்

**(PKS - a retired journalist based in Chennai)**